**செ.வெ. எண்: 356** **நாள்: 20.06.2012**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **19.6.2012** அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிலுள்ள சாலைகளை பராமரிக்க உயரிய தொழில்நுட்பத்துடன் கூடிய, புவியியல் தகவல் அமைப்பு (GIS), ஒருங்கிணைந்த திட்டம், மனிதவளம் மற்றும் நிதிமேலாண்மை அமைப்பு (Projects, Human Resources and Finance Management System - P&FMS) மற்றும் சாலை மேலாண்மை அமைப்பு (Road Management System) ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய ***e*-பாதை** (***e-Pathai*****:** ***e*****lectronic** **P**roject, **A**dministration, **T**raffic, **H**ighway **A**ssets and **I**nformation Management System) மென்பொருட்களை நெடுஞ்சாலைத்துறையின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள்.

நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள **62,017** கி.மீ நீள சாலைகளின் தொகுப்பை சிறந்த முறையில் பராமரிக்க, உயரிய தொழில்நுட்பத்துடன் கூடிய மென்பொருள் அமைப்புகள் உருவாக்கப்பட்டு வலைதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திட்டங்களின் கண்காணிப்பு, சாலை மற்றும் பாலங்கள் குறித்த தகவல், அலுவலக நிர்வாக மேலாண்மை ஆகியவை ***e*-பாதை** அமைப்பின் மூலம் மேம்படுத்தப்படவுள்ளன.

***e*-பாதை** அமைப்பின் ஒன்றான புவியியல் தகவல் அமைப்பு (GIS), சாலை மற்றும் பாலங்கள், துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் சாலை மற்றும் பாலங்களின் தன்மை குறித்த விவரங்களை வரைபடமாக வலைதளத்தில் பதியப்பட்டு பொதுமக்களும் உபயோகிக்கும் வகையில் எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த திட்டம், மனிதவளம் மற்றும் நிதிமேலாண்மை அமைப்பானது (Projects, Human Resources and Finance Management System - P&FMS) நெடுஞ்சாலைத் துறையின் திட்டங்கள், செலவினங்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் அனைத்தையும் கொண்ட விவரத் தொகுப்பை (Database) உபயோகித்து, திட்டப் பணிகளின் செயலாக்கத்தை கண்காணிக்கவும் மற்றும் நிதி மேலாண்மைக்கும் உதவுகிறது. இணையதள வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு உடனடி தகவல்

பரிமாற்றம் மற்றும் அறிவியல் ரீதியான மேலாண்மை மூலம் துறையின் செயல்பாட்டை மேம்படுத்தி மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்ற உதவும்.

சாலை மேலாண்மை அமைப்பு (Road Management System), சாலை கட்டமைப்பு குறித்த விவரங்களை தொகுத்து, பகுப்பாய்வு செய்து பல்வேறு திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள பணிகளை அறிவியல் ரீதியாக தெரிவு செய்யவும், திட்டங்களின் செயலாக்கத்திற்கு தேவைப்படும் நிதி தேவையை முடிவு செய்யவும் உதவும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கடந்த **27.1.2012** அன்று நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கப்பட்ட நவீன தகவல் சேகரிப்பு உபகரணங்கள் மூலம், இந்த ***e*-பாதை** அமைப்புக்கு தேவையான சாலை மற்றும் பாலங்கள் தொடர்பான தளவிவரங்கள் சேகரிக்கப்படும். இத்தகவல்களை பகுப்பாய்வு செய்து சாலை மற்றும் பாலங்களின் தற்போதைய நிலைக்கேற்றவாறு முன்னுரிமைப்படுத்தி, உடனடியாக செயல்படுத்த வேண்டிய பராமரிப்பு பணிகளை இவ்வமைப்பு பரிந்துரை செய்கின்றது.

தமிழ்நாட்டிலுள்ள சாலைகளை பராமரிக்க உயரிய தொழில்நுட்பத்துடன் கூடிய ***e*-பாதை** மென்பொருட்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **19.6.2012** அன்று நெடுஞ்சாலைத்துறையின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர், தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலை) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை.
நாள்: 20.06.2012